# புத்தக மதிப்புரை

(புத்தக மதிப்புரை, ஞாயிற்றுக்கிழமை தோறும் வெளியாகும். புதிய புத்தகங்களை மட்டுமே, தலா 2 பிரதிகள் வீதம் கீழ்க்கண்ட முகவரிக்கு அனுப்ப வேண்டும்:– ஆசிரியர், தினத்தந்தி, சென்னை–600 007)

## வியாசர் இயற்றிய ஸ்ரீமத் பாகவதம்

மகாபாரதத்தை எழுதிய வியாசர், ஏராளமான கிளைக் கதைகளைக் கொண்ட ஸ்ரீமத் பாகவதம் என்ற மிகப் பெரிய நூலையும் எழுதியுள்ளார். அந்த நூலில் உள்ள அனைத்து கருத்துகளும், கிளைக் கதைகளும் எளிய முறையில் படித்து அறிந்துகொள்ளும் வண்ணம் இந்த நூல் தயாரிக்கப்பட்டு இருக்கிறது. காக்கும் கடவுளான விஷ்ணு, அனைத்து உயிரினங்களையும் காப்பதற்காக எடுத்த 20–க்கும் மேற்பட்ட அவதாரங்களும், அந்த அவதாரங்களின் சிறப்பும், அதன் மூலம் வெளிப்பட்ட அறநெறிகளும் விளக்கமாகச் சொல்லப்பட்டு இருக்கின்றன. சிருஷ்டி ரகசியம், உயிரினங்களின் பரிணாம வளர்ச்சி, காலத்தின் கணக்கீட்டு முறை போன்ற விவரங்களையும் இந்த நூலில் காணலாம்.




(ஆசிரியர்: அனந்தாச்சாரி; வெளியீடு: அருணா பப்ளிகேஷன்ஸ்; விலை:ரூ.230; செல்போன்: 94440 47790)

## இந்தியப் பொருளாதாரம்-வரலாறு காட்டும் வழிகள்

வறுமை ஒழிப்பு, அனைவருக்கும் கல்வி, ஏழைகளின் முன்னேற்றம் ஆகியவற்றைத் தனது குறிக்கோளாகக் கொண்டு பணியாற்றிய மால்கம் ஆதிசேசய்யாவின் பன்முகத் தன்மைகளை இந்த நூல் சிறப்பாக வெளிப்படுத்தி இருக்கிறது. சமூகப் பிரச்சினைகள் தொடர்பாக அவர் எழுதிய கட்டுரைகள் மூலம், வெளிநாட்டு முதலீட்டுக் கொள்கை, தொழிலாளர் நலன், வேலை வாய்ப்பு, வறுமை ஒழிப்பு, பொருளாதார வளர்ச்சிக்குத் தடையாக இருக்கும் லஞ்ச ஊழல், கருப்புப் பணம், சுற்றுச் சூழல் கேடு போன்றவை பற்றிய அவரது ஆழமான சிந்தனைகளை அறிந்துகொள்வதோடு, அவரது பொருளாதாரச் சிந்தனைகள் இன்றைய நிலைக்கும் ஏற்ற வகையில் இருப்பதை உணரலாம்.




(தொகுப்பு ஆசிரியர்: ஆ.அறிவழகன்; வெளியீடு: சென்னை வளர்ச்சி ஆராய்ச்சி நிறுவனம்; விலை:ரூ.250; போன்: 044 24412589)